நாடு

எ

# சிற்றகல் ஒளி

– ம.பொ. சிவஞானம்

**நுழையும்முன்**

கதை கேட்கும் வழக்கம் சிறிய வயது முதல் அனைவருக்கும் இருக்கிறது. கேட்பது குறைந்துபோய்க் கதை படிப்பது அதன் அடுத்த படிநிலை. அதுவே ஒருவரைப் படிப்பாளியாகவும் படைப்பாளியாகவும் பக்குவப்படுத்துகிறது. அப்படியான ஒரு படைப்பாளி தன்னை முன்வைத்துத் தன் நாட்டின் வரலாற்றைக் கூறும்நிலை சிலருக்கு மட்டுமே வாய்த்திருக்கிறது. வரலாற்றின் போக்கினை மாற்றி வடிவமைத்தவர்களின் வாழ்க்கைக் கதையைத் தன் வரலாறாகப் படிப்பது, நம்மையும் அந்த வரலாற்றுப் பாத்திரமாக உணரவைக்கும்!



இந்திய விடுதலைப் போராட்ட வரலாற்றில் 1906ஆம் ஆண்டு, மிகவும் சிறப்புடைய ஆண்டாகக் கருதப்படுகிறது. அந்த ஆண்டில்தான் காந்தியடிகள் சத்தியாக்கிரகம் என்ற அறப்போர் முறையைத் தென்னாப்பிரிக்காவில் தொடங்கி வைத்தார். தமிழ்நாட்டைத் தனித்து நோக்கினாலும் வரலாற்றுச் சிறப்பிற்குரிய நிகழ்வுகள் பல அவ்வாண்டில் நடைபெற்றன. வ.உ.சிதம்பரனார் ஆங்கிலேயர்களுக்கு எதிராகச் சுதேசிக் கப்பல் நிறுவனத்தைத் தொடங்கினார். இத்தகைய சிறப்புள்ள ஆண்டில் ஜூன் 26ஆம் நாள், சென்னை ஆயிரம்விளக்கு வட்டம் சால்வன்குப்பம் என்னும் பகுதியில் நான் பிறந்தேன். நான் பிறந்த வட்டத்துக்கு ஆயிரம்விளக்கு எனப் பெயர் இருப்பினும் என்னைப் பெற்றெடுத்த குடும்பம் வறுமை என்னும் இருள் சூழ்ந்ததுதான். என் தந்தையார் பெயர் பொன்னுசாமி. அன்னையின் பெயர் சிவகாமி. பெற்றோர் எனக்கு இட்ட பெயர் ஞானப்பிரகாசம். ஆனால் சரபையர் என்ற முதியவர் ஒருவர் என்னுடைய பெயரை மாற்றி 'சிவஞானி' என்றே அழைத்தார். பின்னாளில் அவர் எனக்கிட்டு அழைத்த சிவஞானி என்னும் பெயரே சிறிது திருத்தத்துடன் சிவஞானம் என்று நிலைபெற்றது.

## வறுமையால் இழந்த கல்வி

நான் பள்ளியில், மூன்றாம் வகுப்பில் நுழைந்த ஏழாம் நாளில், பகல் நேரத்தில் வீட்டுக்கு வந்து சாப்பிட்டுவிட்டுத் திரும்பவும் பள்ளிக்குப் போனேன். காலையிலேயே பாடப்புத்தகங்களோடு வராததற்காக ஆசிரியர் என்னைக் கண்டித்தார். பிற்பகலில் புத்தகங்களைக் கட்டாயம் கொண்டுவர வேண்டுமென்று கட்டளையிட்டிருந்தார். கையில் புத்தகமின்றி இருந்த என்னைக் கண்ட ஆசிரியர் பள்ளியிலிருந்து விரட்டிவிட்டார். இது எனக்குப் பெருத்த அவமானமாக இருந்ததால் அழுதவண்ணம் வீட்டுக்கு வந்தேன்.

நான் அழுவதற்கான காரணத்தை அறிந்ததும், என் தந்தை என்னைக் கையோடு அழைத்துக்கொண்டு வகுப்பறைக்குள் நுழைந்தார். என்னை நல்ல வெயில் நேரத்தில் வீட்டிற்கு விரட்டியதற்காக, ஆசிரியரை என் தந்தையார் வாயார வைதார். அன்றோடு என் கல்வி முற்றுப் பெற்றது. மூன்றாம் வகுப்பிற்கு அந்த நாளில் தேவைப்பட்டவை ஆங்கிலம் – தமிழ் மொழிப் பாடப்புத்தகங்கள்தாம். இவற்றைக்கூட வாங்கிக்கொடுக்க என் குடும்பத்தின் வறுமை இடம் தரவில்லை.